pnb Housing
Finance Limited

பதிவு அலுவலகம் : 9 வது தளம், அன்ட்ரிக்ஷ் பவன், 22, K.G. மார்க், புதுடெல்லி - 110 001
தொலைபேசி எண்கள் - 011-23357171, 23357172, 23705414 வலைதளம் - www.pnbhousing.com
கிளை அலுவலகம் : 1112, ராஜா ப்ளாஸா, II வது தளம், அவினாசி சாலை, லட்சுமி மில்ஸ் அருகில், கோயமுத்தூர் - 641 037
தொலைபேசி : 0422-2240677 மின்னஞ்சல் - coimbatore@pnbhousing.com வலைதளம் - www.pnbhousing.com

பொது அறிவிப்பு - அசையாச்சொத்து(க்கள்) மின்னணு ஏலம் மற்றும் விற்பனை

விதி 8(6) க்கான விதி விலக்கு மற்றும் பிற்சேர்க்கை - IV-A ன் படி அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு
(நாளது தேதியில் திருத்தியமைக்கப்பட்ட பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு & பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழ்)

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், "பிஎன்பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்" ("PNBHFL") என்பது நிறுவனங்கள் சட்டம் 1956 மற்றும் தேசிய வீட்டுக்கடன் வங்கி சட்டம் 1987 ன் பிரிவு 29-A ன் கீழ் பதிவு செய்யப்பட்ட, பஞ்சாப் நேஷனல் வங்கியின் துணை நிறுவனமாக செயல்படும் ஒரு (HFC) வீட்டு வசதிக்கான நிதி நிறுவனமாகும். இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிஎன்பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் - ன், பிணைச்சொத்து பாதுகாப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு & பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) உடன் படிக்க 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தியும், ஒவ்வொரு கணக்குக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் கோரிக்கை அறிவிப்பு/களை வழங்கி, அந்தந்த கடன்தாரர்/களை அழைத்து மேற்சொன்ன அறிவிப்பு(களை) பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக்கோரினார். கடன்தாரர்/கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்ட, இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள அசையாச்சொத்து / க்களை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13(4) மேற்சொன்ன விதிகளில் விதி 8 & 9 உடன் படிக்க' வின் படி, ஒவ்வொரு கணக்குக்கும் எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இயற்சுவாதீனம் / ஆக்கபூர்வ சுவாதீனம் எடுத்துள்ளார். இப்பவும், கீழ்க்கையொப்பமிட்ட நபரால், அசையாச்சொத்துக்களை "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விபரங்களின் படி மூடி முத்திரையிட்ட உறையிலிட்ட விலைப்புள்ளிகள், பொது ஏலம் (மின்னணு ஏலம் உட்பட) மூலம் விற்பதற்காக வரவேற்கப்படுகின்றன. இச்சொத்துக்கள், PNBHFL - உடனான கடன் கணக்குகளுக்கு ஜாமீனாக கொடுக்கப்பட்டவையாகும். இச்சொத்துக்கள், இதன் கீழ்க்குறிப்பிட்ட அந்தந்த கடன்தாரர்களின் கடன் கணக்கு(களுக்கு) எதிராக அடமானம் வைக்கப்பட்டு பெற்ற கடனுக்கான நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக விற்பனை செய்யப்படவுள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண். (A)	கடன்தாரர் / கூட்டு - கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) பெயர் (B)	கோரப்பட்ட தொகை & தேதி (C)	சுவாதீன தன்மை (D)	அடமான சொத்துக்களின் விபரம் (E)	அடிப்படை விலை (F)	டேவணித் தொகை (RP) (G)	ஆய்வு தேதி & நேரம் (H)	ஏல தேதி & நேரம் (I)	தெரிந்த வில்லங்கங்கள் (ஏதேனும் இருப்பின்) (J)
1.	NHL/COI/0417/377891	திருமதி. பத்மாவதி V & வெங்கடேசன் S & ஸ்ரீ டெக்ஸ்டைல் ஈரோடு பிரைவேட் லிமிடெட் & ஸ்ரீ வினாயகா ட்ரேடர்ஸ்	22.10.2018 ரூ. 4,27,03,781.46/- (ரூபாய். நான்கு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து மூன்றாயிரத்து எழுநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா நாற்பத்து ஆறு மட்டும்)	இயற் சுவாதீனம்	சொத்து 1 - திரு. வெங்கடேசனுக்கு சொந்தமானது. நாமக்கல் பதிவு மாவட்டம், பள்ளிபாளையம் சார் பதிவு அலுவலகம், கொமாரபாளையம் தாலுக்கா, பொங்கலூர் பஞ்சாயத்து, பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராமம், சர்வே எண். 229/1 ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 0.56.5 க்கு தீர்வை ரூ. 2.18, புஞ்சை ஏக்கர் 1.00, இதில் உள்ள பட்டியல் சொத்து பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. எல்லைகள் - வடக்கு - வண்டி சாலை, தெற்கு - துரைராஜ், ஜெகநாதன் மற்றும் பிறருக்கு சொந்தமான சொத்து, கிழக்கு - சுந்தரம்மாளுக்கு சொந்தமான இதர சொத்துக்கள், மேற்கு - கிட்டு வாத்தியாருக்கு சொந்தமான சொத்து. இவைகளுக்கு மத்தியில் உள்ள 23.8 செண்ட் அல்லது 10367 சதுர அடி பரப்பளவு கொண்ட விவசாயமற்ற நிலம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இப்பட்டியல் சொத்து பள்ளிபாளையம் அக்ரஹாரம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் அமையப்பெற்று, இந்நிலத்துடன் கூடிய அனைத்து தற்போதைய மற்றும் வருங்கால கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வழித்தட மற்றும் மாமூல் உரிமைகள் மற்றும் சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். சொத்து 2 - திரு. வெங்கடேசன் & பத்மாவதிக்கு சொந்தமானது. ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு சார் பதிவு அலுவலகம், ஈரோடு தாலுக்கா, ஈரோடு டவுன், முன்பு நகராட்சி வார்டு எண். 1, சேர்மன் K.N. குப்புசாமி பிள்ளை சாலை, பழைய எண்.3, பழைய டி.எஸ். எண். 34/2, இந்த பட்டியலுக்குட்பட்ட இந்த சொத்து பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது. எல்லைகள் - வடக்கு - 12 அடி அகல கிழ மேல் இடம் (டி.எஸ். எண். 69), தெற்கு - சேர்மன் K.N. குப்புசாமி பிள்ளை சாலை (டி.எஸ். எண்.1), கிழக்கு - கருப்ப நாடார், ஆறுமுக கவுண்டர் மற்றும் மற்றுமொரு கருப்ப நாடாருக்கு சொந்தமான சொத்துக்கள் (டி.எஸ். எண். 53), மேற்கு - தற்போது ஸ்ரீ டெக்ஸ்டைல் ஈரோடு பிரைவேட் லிமிடெட் - க்கு சொந்தமான சொத்துக்கள் (டி.எஸ். எண்.55), இவைகளுக்கு மத்தியில், ஆவணத்தின் படி, கிழமேல் இருபுறமும் - 42 அடி, தென்வடல் இருபுறமும் - 140 அடி. இந்த அளவீடுகளுக்குள் உள்ள 5880 சதுர அடி. இந்த அளவீடு இவ்வாறு இருந்தாலும், நகராட்சி சர்வே ஆவணங்களில் கண்ட முறையான அளவீட்டின் படி, கிழமேல் வடபுறம் - 12.5 மீட்டர், கிழமேல் தென்புறம் - 12.7 மீட்டர், தென்வடல் இருபுறமும் - 41.4 மீட்டர். இந்த அளவீடுகளுக்குள் உள்ள 521.6 சதுர மீட்டர் அல்லது 5614-1/2 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி வீட்டு மனையிடம் மற்றும் பொது சாலைகளையும் இதர வழித்தட உரிமைகளையும் பயன்படுத்தும் உரிமை போன்றவற்றுடன் கூடிய விவசாயமற்ற நிலம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகளுடன் கூடிய சொத்து மேற்சொன்ன சொத்து தற்போது ஈரோடு நகராட்சி ரீ-சர்வே வார்டு C, பிளாக் எண். 7, புதிய டி.எஸ். எண். 54, K.N.K. சாலை, புதிய கதவு எண். 7/2, வரி விதிப்பு எண். 7008 மற்றும் பட்டா எண். 4334 ல் நிலத்துடன் இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாக நிலத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து தற்போதைய மற்றும் வருங்கால கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து வழித்தட / மாமூல் உரிமைகள் ஆகியவற்றுடன் அமைந்துள்ளது.	சொத்து 1 ரூ. 86,00,000/- (ரூபாய் எண்பத்தி ஆறு இலட்சம் மட்டும்) சொத்து 2 ரூ. 4,53,00,000/- (ரூபாய் நான்கு கோடி ஐம்பத்தி மூன்று இலட்சம் மட்டும்)	சொத்து 1 ரூ. 8,60,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) சொத்து 2 ரூ. 45,30,000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்து இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்)	04.03.2019 காலை 11.00 முதல் மாலை 04.00 மணி	12.03.2019 காலை 02.00 முதல் மாலை 04.00 மணி	பொருந்தாது

இப்பவும், ஜாமீன் பெற்றுக்கடனளித்தவரின் (PNBHFL) ன் அதிகாரப்பூர்வ அலுவலர், மேற்சொன்ன சொத்துக்களை விற்க முடிவு செய்துள்ளதால், மேற்கண்ட விபரங்களுடைய சொத்துக்கள் மேற்குறிப்பிட்ட தேதி, நேரம் மற்றும் இடத்தில் விற்பனை செய்யப்படும் என்ற இந்த விற்பனை அறிவிப்பு இன்று பிரசுரிக்கப்படுகிறது. குறிப்பாக உரிய கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதோடு, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(13) ன் படி, பிணைச்சொத்துக்களுடன் எந்த விதத்திலும் வில்லங்கம் ஏற்படுத்துவதிலிருந்து தடை செய்யப்படுகிறார்கள்., மேலும், ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்தப்படுமாயின், அது மேற்சொன்ன கடன் கணக்குக்கு எதிராக, ஜாமீன் பெற்றுக்கடனளித்தவருக்கு வர வேண்டிய கடன் பொறுப்புக்கு கட்டுப்பட்டது. உரிய கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் ஆகியோர் தங்களது கடன் கணக்குகளை, ஏலத்திற்கு ஒரு நாள் முன்பு வரை ஏற்படும் வட்டி, இதர கட்டணங்கள் ஆகியவற்றுடன் முழுமையாக தீர்த்துக்கொள்ள கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறும் பட்சத்தில், இந்த சொத்துக்கள் மேற்காண் பட்டியலின் படி விற்பனை செய்யப்படும். மேற்கண்ட களம் - B ல் குறிப்பிட்ட அனைத்து கடன்தாரர்கள் / கூட்டு-கடன்தாரர்கள் / அடமானதாரர்களுக்கு, களம் - C ல் குறிப்பிட்ட கேட்பு அறிவிப்பு தேதியின் படியிலான நிலுவைத்தொகை மற்றும் பணமாக்கப்படும் வரை வரும் பொருந்தத்தக்க விதத்திலான வருங்கால வட்டி, ஏற்பட்ட / ஏற்படவிருக்கின்ற நிகழ் செலவுகள், செலவுகள், கட்டணங்கள் ஆகிய விபரங்களுடன் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள அசையா அடமானச்சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் யாவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும், எட்டிய வரையில் கூறப்பட்டவையாகும்., எனினும், கூறப்பட்ட விபரங்களில் ஏதேனும் பிழைகள், தவறான கூற்றுகள் அல்லது தவிர்த்தல்கள் இருப்பின், அதற்கு அவர் பொறுப்பல்ல. அதனால், விலைகோருபவர்கள் / விலைப்புள்ளி சமர்ப்பிப்பவர்கள் / உத்தேச விலைகோருபவர்கள் / வாங்குபவர்கள் ஆகியோர் தங்களது சொந்த விருப்பில் மேற்சொன்னவற்றை பொருத்த மட்டிலும், மேற்குறிப்பிட்ட சொத்துக்களைப்பொறுத்த இதர பொருத்தமான விபரங்களைப்பொருத்தமட்டிலும், தங்களது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே விசாரித்து, தம்மளவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொது ஏலத்திற்கான விதிகள் & நிபந்தனைகள் -

1. விற்பனை, இதன் கீழ்க்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், விருப்பமுள்ள ஏலதாரரால் சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளி / விலைகோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டாயம் கட்டுப்பட்டே நடைபெறும்.
2. சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றுடனேயே விற்கப்படும். ஏலத்திற்கு உட்படுத்தப்பட்ட சொத்துக்களை இதன் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் ஆய்வு செய்து கொள்ளலாம். M/s.Magicbricks Realty Services Limited, மின்னணு ஏலங்களை ஏற்படுத்தும் எமது உறுதுணை பங்காளர் ஆவார். Magicbricks வலைதளத்தில் பதிவு செய்ய / நேரலை விலைப்புள்ளிகளை சமர்ப்பிக்க தாங்கள் எமது சந்தை முகவர் / சேவை தாருடன் இணைந்து பணியாற்ற வேண்டும். தொலைபேசி எண். 9212346000. பதிவு அலுவலகம் - 10, தர்யா கஞ்ச், புது டெல்லி - 110 002 மற்றும் டைம்ஸ் சென்டர் (டிஜிட்டல் கன்டென்ட் ப்ரொடக்ஷன் ஃபெசிலிடி) ல் உள்ள பிரதான அலுவலகம், FC-6, (மூன்றாவது தளம்), செக்டார் 16 A, ஃபிலிம் சிட்டி, நொய்டா - 201 301 (உ.பி) உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும். www.auctions.magicbricks.com . மேஜிக்பிரிக்ஸ் என்பது எமது மின்னணு ஏல ஏற்பாடுகளுக்கு மட்டும் உதவும் பங்குதாரர் நிறுவனமாகும். எனினும், Magicbricks - என்ற கால் சென்டர் குழு, பயனாளியால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க இயலாவிட்டால் / உறுதியான பதிலை அளிக்கா விட்டால், மேஜிக்பிரிக்ஸ் PNBHFL அலுவலர்களுக்கு இணைப்பை ஏற்படுத்தும். விலைப்புள்ளி / ஏல விண்ணப்ப படிவம் சமர்ப்பித்தல், டேவணித்தொகை சமர்ப்பித்தல் தொடர்பாக ஏதேனும் விசாரணை அல்லது தெளிவுரை தேவைப்படுமாயின், PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ன் அதிகாரப்பூர்வ அலுவலரை (களம் (4) ல் குறிப்பிட்டுள்ள தொடர்பு விபரங்களில்) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள வேண்டும். மின்னணு ஏலம் நடத்தப்படுவதில் தொழில்நுட்ப ரீதியாக ஏதேனும் தடையோ பிழையோ இருப்பின் ஏலம் கிளை அளவிலும் நடத்தப்படலாம். உரிய விலைகோருபவரை அல்லது தக்க ஏலதாரரை / வாங்குபவரை தேடுதலை கவனிக்க

அண்ணாதுரை, ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க மக்களவையில் அதிமுக வலியுறுத்தல்

நமது நிருபர்

புது தில்லி, பிப். 5: மறைந்த முன்னாள் முதல்வர்கள் அண்ணாதுரை, ஜெயலலிதா ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் அதிமுக செவ்வாய்க்கிழமை வலியுறுத்தியது.

இது தொடர்பாக மக்களவையில் குடியரசுத் தலைவர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது அதிமுக குழுத் தலைவரும், திருவள்ளூர் தொகுதி உறுப்பினருமான பி.வேணுகோபால் பேசியதாவது:

மதுரையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டிய பிரதமருக்கு நன்றி. நோயாளிகள் விரைந்து சிகிச்சை பெறும் வகையில் மருத்துவமனை திட்டத்தை முடிக்க போதிய நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும். குடியரசுத் தலைவர் தனது உரையில் ஆளில்லா லெவல் கிராஸிங்குகளை நீக்குவது தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், எனது தொகுதியில் உள்ள ஆவடி ரயில் நிலையப் பகுதியில் சுமார் 10 ஆண்டுகளாக லெவல் கிராஸிங் மூடியே உள்ளது.

அந்தப் பகுதியில் சுரங்கப் பாதையும் இல்லை. இதனால், பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. அப்பகுதியில் சுரங்கப்பாதையை அமைக்க ரயில்வே அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கஜா புயல் பாதிப்பு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக முதல்வர் என்டிஆர்எஃப் நிதியில் இருந்து ரூ.2,658 கோடி கோரியிருந்தார். ஆனால், சில கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால், கஜா புயல் பாதிப்பை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும். நிரந்தர நடவடிக்கைக்காக ரூ.15 ஆயிரம் கோடி அளிக்க வேண்டும். மேலும், தமிழக அரசுக்கு பல்வேறு திட்டங்களில் வரவேண்டிய நிலுவை நிதியை மத்திய அரசு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜிஎஸ்டியில் தமிழகத்திற்கு வர வேண்டிய நிலுவைத் தொகை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வர வேண்டிய செயல்பாட்டு, அடிப்படை மானியத் தொகை ஆகியவற்றையும் அரசு வழங்க வேண்டும்.

மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்ற வேண்டும். தமிழக முன்னாள் முதல்வர்கள் டாக்டர் அண்ணாதுரை, ஜெயலலிதா ஆகியோருக்கு பாரதரத்னா விருது வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

சமூக முன்னேற்றத்துக்கு பணியாற்றிய மாணவி ரக்ஷனாவுக்கு பாராட்டு பத்திரம்

முதல்வர் வழங்கினார்

சென்னை, பிப். 5: சமூக முன்னேற்றத்துக்காக பணியாற்றிய கரூர் மாவட்ட மாணவி ரக்ஷனாவுக்கு காசோலை மற்றும் பாராட்டு பத்திரத்தை முதல்வர் கே.பழனிசாமி வழங்கினார்.

பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்பதை உறுதி செய்யவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு வீரதீர செயல் புரிந்த 18 வயதுக்கு உள்பட்ட பெண் குழந்தைக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.1 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டுப் பத்திரம் அடங்கியது.

அதன்படி, இந்த ஆண்டு கரூர் மாவட்டம் ராமேஸ்வரபட்டி கிராமத்தைச் சேர்ந்த ரக்ஷனாவுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. அவர் கரூர் மாவட்டம் முழுவதும் மரங்களை நன்கொடையாக வழங்கியதுடன், உலக வெப்பமயமாதல் உள்ளிட்ட பல்வேறு சூழல் சார்ந்த பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய மூன்று மாணவர்கள் தொடர்ந்து படிப்பை மேற்கொள்ள தனது பெற்றோர் மூலமாக நிதி அளித்தார்.

இத்தகைய செயல்களைப் பாராட்டி, ரக்ஷனாவுக்கு மாநில அரசின் விருதாக ரூ.1 லட்சத்துக்கான காசோலையும், பாராட்டு பத்திரத்தையும் முதல்வர் பழனிசாமி திங்கள்கிழமை வழங்கினார்.

மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வு

விண்ணப்பிக்க மார்ச் 5 கடைசி

சென்னை, பிப்.5: மத்திய ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான (சி.டி.இ.டி.) அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சி.டி.இ.டி. வெளியிட்ட அறிவிப்பு: கேந்திரிய வித்யாலயா போன்ற மத்திய அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பணியில் சேர, சி.டி.இ.டி என்ற தகுதித் தேர்வு மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சி.பி.எஸ்.இ.) சார்பில் நடத்தப்படுகிறது.

2019 ஆம் ஆண்டுக்கான இந்தத் தேர்வு ஜூலை 7 ஆம் தேதி நடத்தப்பட உள்ளது.

இதற்கான ஆன்-லைன் விண்ணப்ப நடைமுறை செவ்வாய்க்கிழமை தொடங்கியது. விண்ணப்பிக்க மார்ச் 5 கடைசி நாளாகும்.

இந்தத்தேர்வு இரண்டுதாள்களைக் கொண்டது. 5 ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர் பணிக்கு முதல் தாள் மட்டும் எழுதினால் போதுமானது.

எட்டாம் வகுப்பு வரையிலான ஆசிரியர் பணிக்கு இரண்டு தாள்களும் எழுத வேண்டும்.

இதில் ஒரு தேர்வை மட்டும் எழுத விரும்பும் பொதுப் பிரிவினர் ரூ. 700 கட்டணமும், இரண்டு தாள்களும் எழுத விரும்புபவர்கள் ரூ. 1200 கட்டணமும் செலுத்த வேண்டும்.

எஸ்.சி., எஸ்.டி. பிரிவினர் ஒரு தாளுக்கு ரூ. 350 கட்டணமும், இரண்டு தாள்களுக்கு ரூ. 600 கட்டணமும் செலுத்தவேண்டும்.

மேலும் விவரங்களுக்கு www.

இணையத்தில் புதிய பட பிரச்னை: தமிழக அரசே தீர்க்க முடியும்

சென்னை, பிப். 5: இணையதளத்தில் புதிய படங்களை வெளியிடும் பிரச்னைக்கு தமிழக அரசே முடிவு கட்ட முடியும் என்று நடிகர் விஷால் தெரிவித்தார். திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் சார்பில், இளையராஜா 75 விழா நடத்தப்பட்டது. இதற்கு ஒத்துழைப்பு அளித்த முதல்வர் பழனிசாமிக்கு தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் விஷால் நன்றி தெரிவித்தார். இதன் பின், அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:-

கடந்த 2, 3-ஆம் தேதிகளில் இளையராஜா 75 என்ற மாபெரும் இசை நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்தது. இதற்கு பாதுகாப்பு வழங்கியதற்காக நன்றி தெரிவிக்க

இதற்கு நன்றி தெரிவித்து கடிதம் அளித்தோம். இளையராஜாவின் 1000 படங்கள் குறித்த புத்தகம் ஒன்றையும் அளித்தோம்.

ஏற்கெனவே அரசிடம் அளித்த கோரிக்கை மனுக்களை மீண்டும் நினைவுபடுத்தினோம். குறிப்பாக தமிழ்மொழிப் படங்களின் வெளியீட்டின்போது மற்ற மொழிப் படங்கள் வெளியாகின்றன. அப்போது தமிழ்ப் படங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஜூலை முதல் வாரத்தில் நடிகர் சங்கக் கட்டடத்தின் திறப்பு விழா இருக்கும். புத்தம் புதிய திரைப்படங்களை இணையதளத்தில் வெளியிடும் தமிழ் ராக்கர்ஸை